# ஞானியின் பாதை!



# ஞானியின்

# பாதை!

பிரக்ஞன்

# ஞானியின் பாதை!

ஹரி ஓம்,

சனாதன தர்மத்தின் பண்டைய வேதசாஸ்திரத்தின் வழியில் வந்த ரிஷிகள் கூறும் ஆழமான உண்மை “**ப்ரஹ்மம் சத்தியம்! ஜகத் மித்யா!**” என்ற மகா வாக்கியத்தின்படி இருக்கின்ற ஒரே “**இருப்பு**” (ப்ரஹ்மன்) பிரதிபிம்பித்து பிரகாசிக்கின்ற ஊடகம் என்ற கண்ணாடி தான் இந்த உடலும், மனமும் எனும்போது, கண்ணாடியின் வாயிலாக அறியப்படுபவைகள் அனைத்தும், அந்த ஊடகத்தின் (உடல், மனம்) மூலம், இந்த உலகத்தில் உறவாடுகின்றது என்பதை ஏற்றுக் கொண்டவன் ஞானி.

அப்படிப்பட்ட ஜீவன் முக்தன் இந்த உடல், மனம் இருக்கின்றவரை இந்த உலகத்தில் ஏதாவது விவகாரம் செய்துக் கொண்டிருக்க முடியுமா? அல்லது சும்மா இருக்க முடியுமா? என்றால், ஒருவன் முகம் பார்க்கும் கண்ணாடி முன்பு நின்றுக்கொண்டு, கண்ணாடியில் என் முகம் தெரியக்கூடாது என்று கூறுவதுப் போல, இந்த கேள்வி ஆகிவிடும்.

ஆம்! கண்ணாடி முன்னால் நின்றுவிட்டால், அவனது உருவம் அதில் பிரதிபிம்பித்து தெரிவதை அவனால் எப்படி தடுக்க முடியாதோ? அதுப்போல, ஞானிக்கு இந்த உடல், மனம் எனும், ஊடகத்தை வைத்துக் கொண்டு, அதில் பிரகாசிக்கின்ற உலகம் உண்மையில் இல்லை என்று உதாசீனப்படுத்த முடியாது.

ஆனால், அது கண்ணாடியின் (புலன்கள்) மூலம் தெரிகின்ற பிரதிபிம்பம் என்று அவனால் அறிந்துக் கொள்ள முடியும்.

அதற்கான அருமையான உபதேசம், “**ப்ரஹ்மம் சத்தியம் – ஜகத் மித்யா**” என்ற வேதத்தின் விளக்கம்தான் என்ன?

அதாவது, ஜகத் மித்யா என்றால், இல்லை என்பதல்ல. அது சுயாதீனமான சத்தியம் அல்ல! என்பதே அதன் பொருள்.

- **உடல் – மனம் – உலகம்**

  - ப்ரஹ்மத்தின் இருப்பினால், இந்த உலகம் என்பது, உடல், மனம் மீது உண்டாகும் விவகாரப் பிரதிபலிப்பு.
  - வ்யவஹார சத்தியம்.
  - ஆனால், இவைகள் பாரமார்த்திக சத்தியம் அல்ல!

ஆகவே, ஒருவனுக்கு ப்ரஹ்மஞானம் வந்தவுடன் அவனது **உடல் – மனம்** உடனடியாக மறைந்து போவதில்லை. அவைகள் தோன்றிக் கொண்டே இருக்கும். ஆனால், அவைகளை "**நான்**" என்று பிடித்துக் கொண்டிருக்கின்றேன் என்ற '**அறியாமை**' அவனிடம் இருக்காது. அடைந்த அத்யாத்ம ஞானத்தினால், அந்த தவறு நீங்குகிறது.

சரி! "அப்படியானால், ஞானியும் இனி இந்த உலகத்தில் விவகாரம் செய்ய வேண்டுமா?" என்றால், அவனால், "விவகாரம் செய்யப் படவில்லை – விவகாரம் நடக்கும்." அதாவது, முன்பு "**நான் செய்கிறேன்**" என்று இருந்தது. ஆனால், இப்போது, இதே உடலையும், மனதையும் கொண்டு, "**ப்ரக்ருதி**" (ஈஸ்வரன் – மாயா) செய்கிறது. ஆனால், "**நான்**" அவைகளுக்கு '**சாக்ஷி**' மாத்திரமாக இருக்கின்றேன் என்ற நிலைதான் ஜீவன்முக்த நிலை.

இந்த நிலையில், உடல் இயங்கும், மனம் சிந்திக்கும், வாக்கு பேசும், ஆனால் உள்ளே '**நான் செய்கிறேன்**' என்ற கர்த்ருத்வம் இல்லை. அப்படியானால், இந்த நிலையைத்தான் "**சும்மா இருப்பது**" என்று எடுத்துக் கொள்ளலாமா? என்றால், இதன் அர்த்தம் பற்றிய ஆழமான உண்மையை நன்கு உணர வேண்டும்.

அதாவது, உடல் எனும் நிலையில் வெளிப்படையான "**சும்மா**" இருப்பது, என்பதாக எடுத்துக் கொண்டு, உடலை அசையாமல் வைத்தல் அல்ல. செயல்களை விட்டு விலகுதல் என்பது, மனதின் மௌனம் மட்டுமே ஆகும்.

அதாவது, உண்மையான "**சும்மா இருப்பது**" என்பது, மனத்தில் "**நான் செய்கிறேன்**" என்ற இயக்கம் இல்லாமை என்பதாகும். ஆக, "**மனதில் சும்மா இரு** – ஆனால், **உடலில் இயல்பாக இயங்கு**."

அதாவது, கண்ணாடி முன் நின்றால் உருவம் தோன்றுவதைத் தடுக்க முடியாது.

அதுப்போல, ஆத்ம சன்னிதியில் (அறிவு ஒளி இருப்பில்) உடல்–மனம்–உலகம் தோன்றியே தீரும். அதை தடுக்க முடியாது. அதாவது, கண்ணாடி, தன்னிடம் பிரதிபிம்பிக்கின்ற உருவங்களைக் கண்டு, “இந்த உருவம் நான்” என்று அபிமானிப்பதில்லை. அதுப்போல, ஞானி உடலையு, மனதையும் கண்ணாடி போல பயன்படுத்துவான். ஆனால் **“நான் இதல்ல”** என்ற அபிமானம் அவனிடம் இருப்பதில்லை. அபேத ஞானத்தில் உறுதியாக இருப்பான்.

“இந்த நிலையில் ஞானி என்பவன் ‘**ஸ்திதப்ரக்ஞன்**’ ஆவான். அதாவது, வெளியில் பார்ப்பதற்கு சாதாரண மனிதன். அவன் உள்ளே அசையாத ஆத்மநிலை உண்டாகியிருக்கும்.

அவன், **அகர்த்தா – அபோக்தா – அசங்கன்** (நான் செய்பவன், அனுபவிப்பவன் அல்ல! நான் எதனோடும் சம்பந்தப்படாதவன்)

ஞானியின் விவகாரத்தில் அலட்சியம் இல்லை! – அவனது செயல்களின்மீது பற்றும் இருக்காது. அத்துடன், அவனது குடும்பம், சமூகம், உடல் பராமரிப்பு என எல்லாம் இருக்கும். ஆனால், அவைகள் என்னுடையது என்ற அபிமானம் இருக்காது. அவைகளினால் வருகின்ற பலன்கள் **“எனக்கு வேண்டும்”** என்ற ஆசையும் இருக்காது.

இதற்கான உபநிஷதம் கூறும், உபதேசம் என்னவெனில்,

**“லோகோ வியவஹரன் – ஞானி ந வியவஹரதி”.**

“இந்த உலகம் விவகாரம் செய்கிறது – ஞானி அவைகளுக்கு சாட்சியாக இருக்கிறான்.” ஆகவே, விவகாரம் நடக்கட்டும். ஆனால், அதில் சிக்காமல் இருக்கலாம்!

அதாவது, ஞானிக்கு இந்த உடலும் மனமும் இருக்கும்வரை, விவகாரம் நடக்கும் அதைத் தடுக்க வேண்டியதில்லை.

அதில் ‘**நான்**’ புகுந்துவிடாமல், பார்த்துக் கொள்வதே சாதனை. இதுவே, உண்மையான **“சும்மா”** இருப்பது.

கர்த்ருத்துவமற்ற இருப்பு.

“இந்த நிலை வாழ்க்கையில், ஞானிக்கு அது எப்படி இயல்பாக முதிர்கிறது?”

**ஞானம்** “செய்யப்படுவதில்லை” — “நிலைத்துக் கொள்கிறது.”

ஞானிக்கு, அத்தகைய ஞான நிலையில், “**நான் ஆத்மா**” என்ற தெளிவு. ஆனால், உடல் பழக்கம், மன வாசனை அவ்வப்போது தலை காட்டும். ஆனால், அவைகளினால் அவன் பாதிக்காதவாறு, எப்போதும், ஒரு திரைப்படம் பார்ப்பதுப்போல, அவைகளுக்கு **சாக்ஷி** மாத்திர மாகவே அவனால், இருக்க முடியும். இதுவே ஞானத்தின் முதிர்ச்சி.

ஞான முதிர்ச்சியின் 3 இயல்பான அடையாளங்கள்

1. **உலகில்**, **வெளியில் மாற்றம் இல்லை** – அவனது வாழ்க்கை தொடரும், வேலை, குடும்பம், உறவுகள் இருக்கும், உலகம் “**இவன் மாறவில்லை**” என்று நினைக்கும்.

2. **உள்ளே எதிர்ப்பு இல்லை** - நிகழ்வுகளை எதிர்க்காத மனம். “**இப்படி இருக்கக்கூடாது**” அல்லது “**இப்படித்தான் இருக்க வேண்டும்**” என்ற வாதம் குறையும்.

3. **அவசரம் கரையும்** - விருப்பம் வரலாம். ஆனால், அவைகளை நிறைவேற்ற வேண்டும் என்ற கட்டாயம் அவனிடம் இல்லை.

**பழம் உவமை** என்னவெனில்,

**காய்** — பிடிவாதம்

**கனிய** — சமரசம்

**பழம்** — இயல்பாக உதிர்தல்.

ஞானம் முதிர்ந்தால், துறக்க வேண்டியதில்லை. பற்றுகள் தானாக விழும்

இதற்கான, முக்கிய உபதேசம் என்னவெனில் இந்த “ஞானி நிலை பிடித்திருக்க முயலாதே.”

அதற்கான முயற்சி செய்தால், அங்கே செய்பவன் உருவாகிறான். அது மீண்டும் அகங்காரம் ஆகின்றது.

**“பழைய வாசனைகள் வந்தால் எப்படி கையாள வேண்டும்?”**

- வாசனைகள் வருவது தவறு அல்ல.
- “இது ஏன் வந்தது?” என்று போராடுதல்.
- “இன்னும் ஞானம் இல்லை போல” என்று தாழ்வு.
- வாசனையை ஒடுக்க முயற்சி.

இவைகள் அனைத்தும் வாசனையை மேலும், வலுப்படுத்தும். ஆக, வாசனைகளை உடனடியாக செயலாக்கம் செய்யக்கூடாது. அவைகளுக்கு உடனே செயல் வடிவம் கொடுக்க கூடாது. அதில் ஈடுபடக்கூடாது. இப்படி நடைமுறையில் வாழ்ந்தால், வாசனைகள் இல்லாமல் கரையும்.

- **வாசனைகள்** = வந்து, போகின்ற அலைகள்
- **ஞானி** = கடல்.

அலை வருவது கடலின் குறை அல்ல. அலைகளை நிறுத்த கடல் முயல்வதில்லை. ஆகவே, **“வாசனையை அழிக்க முயல்வதும் வாசனைதான்.”** அவைகள் வரட்டும், போகட்டும். ஆனால், ஞானி சாட்சியாக மட்டும் இருப்பார்.

நடக்கின்ற **“நிகழ்வில் தலையிடாதே, நிலையிலிருந்து விலகாதே.”** வாழ்க்கை தானாகவே நடக்கும். அதிலே, வாசனைகள் தோன்றும். ஆனால், ஞானி அதற்கான ஊடகம் அல்ல! என்பது, அவனுக்கு நன்றாகத் தெரியும்.

அதாவது, **“ஞானி வாசனையற்றவன் அல்ல. வாசனையால் கட்டுப்படாதவன்.”** ஞானிக்கு *“ஞானம் வந்தவுடன் வாழ்க்கை நிற்காது”*. ப்ராரப்தம் உள்ளவரை உடல் – மனம் இயங்கும். அதாவது, ஞானம் வந்தாலும், உடல் பசிக்கிறது. மனம் நினைக்கிறது.

உலகம் தொடர்பு கொள்கிறது. இவைகளை, நிறுத்த முயல்வது, அஹங்காரத்தின் புதிய வடிவம் ஆகிவிடும்.

ஆகவே, அவைகள் அதன் போக்கில், *“இயங்கட்டும். ஞானி அதில் கலங்கமாட்டான்.”*

“சும்மா இருப்பது = செயலின்மை அல்ல”.

மௌனம் என்பது, மனசெயல் இல்லாமை ஆகும்.

உடல் வேலை செய்யலாம். வாக்கு பேசலாம். ஆனால், “**நான் செய்கிறேன்**” என்ற மையம் இல்லாமல், இருப்பதே, இங்கு “**சஹஜ சமாதி**” எனப்படுகின்றது.

“**ஆத்ம நிலை முதிர்ச்சி மெதுவாகவே வரும்**” மரங்களில் இருக்கும் காயை வலுக்கட்டாயமாகப் பறித்து, பழுக்க வைக்க முயற்சிக்கக் கூடாது. அது, தானாகவே பழுத்து உதிர வேண்டும். அதுப்போல, நடப்பது எல்லாம் அதுவாக நடக்கட்டும் என்ற நடைமுறை வாழ்க்கையில் அனுபவமாக வேண்டும்.

ஆரம்பத்தில், சிலசமயம் அமைதி. சிலசமயம் கலக்கம்.

அப்படி, கலக்கம் வந்தாலும், அவைகள் விரைவில் கரையும், ஆத்ம ஞான முதிர்ச்சியில், கலக்கம் வருவதற்கான இடம் வெகுவாகக் குறையும்.

முயற்சி செய்யாத முதிர்ச்சி உண்டாகும். இதுவே உண்மையான ஞானம்

- “ஞானிக்கு மரணம் ஒரு நிகழ்வு அல்ல”
- மரணம் உடலுக்கே; ஆத்மாவுக்கு அல்ல.
- ஞானிக்கு, “நான் உடல்” என்ற அடையாளம் ஏற்கனவே கரைந்தது.
- மரணம் ஒரு மாற்றமாககூட அனுபவிக்கப்படுவதில்லை

**மரணத்தின் போது என்ன நடக்கிறது?**

| **சாதாரண ஜீவன்** | **ஞானி** |
|---|---|
| பிராணன் வெளியேறும் | பிராணன் இயல்பாக விலகுகிறது |
| மனம் பயத்துடன் பிடிக்கும் | மனம் பிடிப்பதற்கு இல்லை. |
| வாசனைகள் அடுத்த பிறவிக்குச் செல்லும் | வாசனைக்கு அடிப்படை இல்லை |

ஆகவே, ஞானிக்கு மரணம் = ஆழ்ந்த நித்திரை போல ஒரு கரைவு.

- “ஞானிக்கு மரண அனுபவமே இல்லை”
- அனுபவிப்பவன் இல்லாத இடத்தில் அனுபவம் இல்லை.
- அனுபவம் இருந்தால், அனுபவிப்பவன் வேண்டும்.
- ஞானத்தில், அனுபவிப்பவன் ஏற்கனவே இல்லை

➢ ஆகவே, மரணம் ‘**நிகழ்ந்து முடியும்**’ — ‘அனுபவிக்கப்படாது’

| **ஜீவன்முக்தி** | **விதேஹமுக்தி** |
|---|---|
| உடல் இருக்கிறது | உடல் இல்லை |
| ஞானம் நிலை கொண்டுள்ளது | அதே ஞானம், தடையில்லாமல் |
| இனி எந்த பயமும் இல்லை | இழக்க ஒன்றும் இல்லை. |

இரண்டும் வேறு நிலைகள் அல்ல. ஆகவே, புதிதாக எதுவும் **“அடையப்படவில்லை”**

- “நான் இருக்கிறேன்” என்ற தூய இருப்பு மட்டும்.
- ஞானி மரணத்தை கடக்கவில்லை. மரணம் அவனை கடக்கிறது.
- சஹஜ சமாதி அடையப்படுவதில்லை. அது நீயாக இருப்பது.
- “இனி எதையும் அறிய வேண்டாம். இருப்பதை மட்டும் தவற விடாதே.”

| ஜாக்ரத் | ஸ்வப்ன | ஸுஷுப்தி |
|---|---|---|
| விஷயங்கள் | மன உருவாக்கம் | எண்ணமில்லை |
| பௌதீக உலகம் உண்டு | மனோ உலகம் உண்டு | “நான்” என்ற தனிப்பட்ட உணர்வும் இல்லை. ஆனால், இருப்பு மட்டும் உள்ளது. |

- ஞானிக்கு ஸுஷுப்தி ஒரு ‘நிலை’ அல்ல. அது அவன் இயல்பின் பிரதிபலிப்பு.
- ஞானி ஜாக்ரத்தில் சாட்சி, ஸ்வப்னத்தில் சாட்சி, ஸுஷுப்தியிலும் சாட்சி.
- ஞானிக்கு தூக்கமும் ஞானத்திலேயே. இதுதான் சித்–மாத்திர நிலை.
- ஞானிக்கு மரணம் = ஒரு விளக்கு அணைதல் அல்ல, திரை அகற்றுதல்.

பொதுவாக, சுஷுப்தியில் அனைவரும் ப்ரஹ்மனில் உள்ளனர். ஞானி மட்டும் எப்போதும் அதை “**இழக்காமல்**” இருக்கிறான். ஞானி தூங்கினாலும் விழித்திருப்பான். அவன் இறந்தாலும் மறைய மாட்டான். ஜீவன்முக்தி என்பது, விளக்கின் வெளிச்சம் போன்றது. விதேஹமுக்தி என்பது, அந்த வெளிச்சத்திற்கு தடையில்லா ஆகாயம்.

ஓம் தத் ஸத்!

# ஞானியின் பாதை!

